**OPEN ACCESS**

Manuscript ID: TAM-09042025-8889

Volume: 9

Issue: 4

Month: April

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 13.01.2025

Accepted: 25.03.2025

Published: 01.04.2025

Citation:
Rajeswari, R., and A. Joyce Jaya Ruby. "Salmavin Padaippugalil Samoogach Chinthanaigal." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 4, 2025, pp. 28–40

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i4.8889

*Corresponding Author:
rajishanmugavel123@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Social Thought in Salma's Poetry

**R. Rajeswari**
*(BDU2110632779482), Ph.D. Research Scholar,*
*Department of Tamil, Government Arts College, Trichy*
*(Affiliated to Bharathidasan University)*
*https://orcid.org/0009-0000-8766-7585*

**A. Joyce Jaya Ruby**
*Assistant Professor*
*Department of Tamil, Government Arts College, Trichy*
*(Affiliated to Bharathidasan University)*

**Abstract**
*Literature reflects the events of society, and poetry occupies a significant place within it. Poetry, beyond its elements of simile, metaphor, alliteration, rhyme, semantic richness, and concentrated meaning, also serves as a vital component of life. In this regard, Salma's poems are predominantly centered around women. With three poetry collections published so far, this article serves as an expression of the observation that the creator's perspective has extended beyond women's society to encompass other social aspects as well.*

***Keywords:*** *Tamil Poetry, Literary Criticism, Feminism, Salma, Sociological Study*

**References**

1. Salma. Thaanumaanaval, kalachchuvadupablications, naagarkovil, muthalpathippu - February 2021.
2. Salma. Pachchaithevathai, Kalachchuvadu Pablications, Naagarkovil, Inthaampathippu, 2021.
3. Salma, Orumaalaiyuminnorumaalaiyum, kalachchuvadupablications, naagarkovil, onbathaampathippu, 2019.
4. Aandaal priyadharshini. Naan vallinam, Kumaran pathippagam Chennai, muthalpathippu, 2010.
5. Sivasubramaniyan A. Adiththala Makkal varalaaru, thevaaaapset Chennai, muthalpathippu, 2002.
6. Saami M.P. (thamilil) Kudiyurimaiyumkudiyurimaichsattamum, Bharathi hthagaalayam Chennai, muthalpathippu – 2020.
7. Salma. Kanavuvelippayanam, vikadanpirasuram Chennai, muthalpathippu – December 2014.
8. Balasubramaniyan C. Sangakalamagalir, naathan and company Chennai, muthalpathippu – 1983.
9. Samuththiram S. Vaadaamalli, Balaji pathippagamnaagarkovil, muthalpathippu - 2018.
10. Bharathidasan. Kudumbavilakku, jenaral printers Chennai, irandaampathippu – May 1960.
11. ThirukkuralUraiyaasiriyar. Sirpi Bala Subramaniyan, Thaamarai publications (P) lit, Chennai, Ettaampathippu – June 2022.

**Internet**

1. https://www.tamilvu.org
2. https://www.bbc.com

**Theses**

1. Mu KavithaikalilSamuthaayachsinthanaigal, aaivaalar, K. Bhuvaneswari.
2. Pen Kavingarkalinpadaippukalilperiyaariyaththaakkam, aaivaalar R. Anitha.

# சல்மாவின் கவிதைகளில் சமூகச் சிந்தனை

**இரா. இராஜேஸ்வரி**
(BDU2110632779482), முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை
அரசு கலைக்கல்லூரி, திருச்சி, (பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது)

**முனைவர் ஆ. ஜாய்ஸ் ஜெய ரூபி**
(BDU06333001075). உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
அரசு கலைக்கல்லூரி, திருச்சி
(பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது)

**ஆய்வுச் சுருக்கம்**

*சமூகத்தின் நிகழ்வுகளைப் பிரதிபலிப்பது இலக்கியம். அதில் கவிதை பெரும் இடம் வகிக்கிறது. கவிதை என்பது உவமை, உருவகம், மோனை, எதுகை, பொருள்வளம், கருத்துச்செறிவு ஆகியவற்றைத் தாண்டி வாழ்வியல் கூறாகவும் அமைகிறது. அந்த வகையில் சல்மாவின் கவிதைகள் பெரும்பாலும் பெண்களை மையமிட்டதாக அமைந்துள்ளன. மூன்று கவிதைத் தொகுப்புகள் இதுவரை வெளிவந்த நிலையில் படைப்பாளரின் பார்வை பெண் சமூகத்தைத் தாண்டி பிற சமூகம் சார்ந்தும் வெளிப்பட்டிருக்கிறது என்பதைக் காண விளைந்ததன் வெளிப்பாடாய் இக்கட்டுரை அமைந்துள்ளது.*

***முக்கியச்சொற்கள்:*** *தமிழ்க் கவிதை, திறனாய்வு, பெண்ணியம், சல்மா, சமூகவியல் ஆய்வு*

பெண்களுக்குக் கல்வி அவசியம். ஆனால் அதைப்பெறுவதில் பல நம்பிக்கை இழப்புகள் ஏற்படுகின்றன. அதை எதிர்நோக்கும் மாணவர்களின் நிலை கவலைக்கிடமாகிறது. இதுபோன்ற சில கூறுகளை இவ்வாய்வு முன்வைக்கிறது. அவை:

1. பெண்கள் சமூகத்தின் சிக்கல்களை எதிர்கொள்ள தன்னம்பிக்கையும், துணிவும் வேண்டும்.
2. திருநங்கைகளின் கூட்டு வாழ்க்கையும், வலிகள் நிறைந்த உடற்கூறுகளும் பேசப்படுகிறது. இது அவர்களின் உரிமைக்கான குரலாக அமைகிறது.
3. மருத்துவக் கல்வி பெறும் மாணவர்கள் பலர் இருக்கின்றனர். அதில் சிலருக்கு மட்டும் அக்கனவு பலிக்கிறது. கனவுகள் பொய்த்துப் போனவர்களின் நிலைகள் பேசமுடியாமல் போகிறது. அதனைப் பேசுப் பொருளாக்கும்போது மாணவர்களுக்கு வழிகாட்டுதலாக மாறுகிறது.
4. குடும்பங்கள்தோறும் பெண்களின் உழைப்பும், பொருளாதாரமும், கனவுகளும் சுரண்டப்படுகின்றன. இயற்கை வளங்களும் அப்படி சுரண்டப்படுகின்றன. இவை ஆற்றலும், அவசியமும் மிகுந்ததாக இருக்கின்றன. எனவே அவை சமூகத்தால் சுரண்டப்படுகின்றன.
5. இஸ்லாமிய மக்களின் போராட்ட வாழ்க்கையைப் புலப்படுத்துகிறது.
6. அடித்தட்டு மக்களின் பொருளாதாரத்தில் மதுப்பழக்கம் இளைஞர்களின் வாழ்வைக் கெடுக்கிறது.
7. அனாதைக் குழந்தைகள் உருவாகும் அவலநிலை குறித்துப் பேசப்பட்டுள்ளது.

8. துப்புரவுத் தொழிலாளர்களின் வாழ்க்கை முறையைத் தெளிவுபடுத்துகிறது.
9. சமூகத்தின் வளர்ச்சிகளைப் பாதிக்கும் தீய பழக்கங்களாகப் புகையிலைப் பயன்பாடு இருக்கிறது. அது எதிர்காலத் தலைமுறைகளைப் பாதிக்கிறது.

போன்ற சமூகச்சிக்கல்கள் பற்றி சல்மாவின் கவிதைகளில் சமூகப்பார்வை கொண்டு விரிவாக இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

## முன்னுரை

ஒருவர் வெறும் பொழுது போக்கிற்காக மட்டும் கவிதைகளை எழுதுவதில்லை. அது சமூகத்தின் பதிவாகவும் காணப்படுகிறது. இலக்கியம் மனித வாழ்க்கையின் கண்ணாடியாக உள்ளது. அந்த வகையில் சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகச் சல்மாவின் படைப்புகள் அமைந்துள்ளன. அவர் மக்களின் வாழ்க்கை, வலிகள், துன்பங்கள், பிரச்சினைகள், தீர்வுகள் என எல்லாவற்றையும் கவிதைகளில் பதிவு செய்துள்ளார். சமூகம் சார்ந்த சல்மாவின் சிந்தனைகளை வெளிப்படுத்துவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

## பெண் கல்வி

ஒவ்வொரு தனிமனிதரின் வாழ்வும் சிறக்க கல்வி அவசியமாகிறது. அவரின் அறிவு பெருகவும், ஆளுமைத்திறன் வளரவும் கல்வி இன்றியமையாததாக மாறியுள்ளது. மனிதனின் முக்கியத் தேவைகளுள் கல்வியும் இடம்பெற்றுள்ளது. இதனைக் கொன்றைவேந்தன், எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும் என்கிறது. சிலருக்கு கல்வியைப் பெறுவது எளிதாக அமைவதில்லை. இளைஞர்கள் பெரும் முயற்சிகளையும், போராட்டங்களையும் ஏற்றுக் கல்வியைப் பெறுகின்றனர் இன்றையச் சூழலில் கல்வி வியாபாரம் ஆகிவிட்டது. இருப்பினும் மாணவர்கள் விடாமுயற்சியுடன் கல்வியைப் பெற எண்ணுகின்றனர். அழியாச் செல்வமாகிய கல்வியை அடைந்திட பல முயற்சிகளை மேற்கொள்கின்றனர். இத்தகையச் சூழல் வள்ளுவரை நினைவூட்டுகிறது.

**எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்என்ப வாழும் உயிருக்கு**
**(குறள் எண், 392)**

என்பது வள்ளுவர் வாக்கு. எண்ணும், எழுத்தும் மண்ணில் வாழும் உயிர்களுக்கு இரண்டு கண் போன்றதாகும். அக்கல்வியை மாணவர்கள் பெரும் முயற்சியும், இலக்கும் கொண்டு அடைய எண்ணுகின்றனர்.

சங்க காலத்தில் மகளிருக்கும், ஆடவர்களுக்கும் கல்வி வேறுபட்டிருந்தது. ஆடவர் போர், தூது, காவல், பொருளீட்டல் போன்ற கல்வி முறைகளைக் கற்றுத் தேர்ந்தனர். இதைப்போல் பெண் கல்வி குறித்துச் சங்க மகளிர் இயல், இசை, கூத்து என்னும் தமிழின் முத்துறையிலும் நல்ல தேர்ச்சி பெற்று விளங்கினர். நல்லிசைப் புலமை மெல்லியலார் பலர் அந்நாளில் திகழ்ந்தனர். (சி. பாலசுப்பிரமணியன், சங்ககால மகளிர், பக்: 18) என்கிறார். இன்றையச் சூழலில் பெண்கல்வி பெரும் மாற்றங்களைச் சந்தித்துள்ளது.

சமூகத்தில் பெண்கள் கல்வி பெறுவது போராட்டங்களுக்கு உரியதாகக் கருதப்படுகிறது. அதில் குடும்பம், சமூகம், வறுமை, பாலியல் தொல்லை, பாதுகாப்பின்மை, உடல் பலமின்மை, சமூகக்கட்டமைப்பு, பாலின வேறுபாடு என எண்ணற்ற தடைகளை உடைத்து பெண் வெளியில் வந்து படிக்கும் நிலை உருவாகி வருகிறது. ஒரு நாட்டிற்குப் பொருளாதாரமும், அறிவியலும் முக்கியத்துவம் பெறுவது போல், ஆண், பெண் இருவர் கல்வியும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. பெண் கல்வி நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் என்பதால் அரசு பெண்கள் கல்வி பெறுவதைக் கவனித்து வருகிறது. கல்வி உரிமைச் சட்டத்தின் மூலம் அரசு பெண் கல்வியின் அவசியத்தை முன்னிலைப்படுத்துகிறது. பெண்கல்வியின் அவசியம் பற்றி பாரதிதாசன்,

**கல்வி இல்லாத பெண்கள்**
**களர்நிலம் அந்நிலத்தில்**
**புல் விளைந்திடலாம்! நல்ல**
**புதல்வர்கள் விளைதல் இல்லை!**

***(குடும்ப விளக்கு, விருந்தோம்பல், பக்: 76)***

என்கிறார். கேரள மாநிலத்தைச் சேர்ந்த பாத்திமா லத்தீப் நல்ல மதிப்பெண் பெற்றிருந்தார். சென்னை ஐ.ஐ.டி யில் சேர்ந்து படிக்க வேண்டும் என்பது அவரின் கனவாக இருந்தது. அதற்காகப் பெற்றோரின் அனுமதி பெற்று அக்கல்வி நிறுவனத்தில் சேர்ந்தார். அங்கு ஏற்பட்ட சாதி, மத ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கப்பட்டு, 2019 நவம்பர் 9 ஆம் தேதி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். அவரின் இறப்பு பற்றியும், அக்கல்வி நிறுவனம் பற்றியும் தமிழகம் முழுவதும் பேசப்பட்டு வந்த நிலையில் கனிமொழி தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் இந்த கல்வி நிறுவனங்களில் காட்டப்பட்டு வரும் பாகுபாடுகளால் மாணவர்கள் தற்கொலை செய்யப்போகிறார்கள் என்றால், அந்த கல்வி நிறுவனம் அவ்வாறு செயல்பட அனுமதிக்கக்கூடாது. உயர்கல்வி நிறுவனங்கள் பாரபட்சம் காட்டும் இடமாக செயல்படக் கூடாது. நாம் இந்த தலைமுறையினருக்கு கல்வி என்று எதனை கற்பிக்கிறோம் (B.B.C News தமிழ், இணையம்) என்கிறார்.

மாணவர்களின் (குழந்தைகளின்) பிரச்சினைகளைக் கேட்க வேண்டும். இல்லையேல் இதுபோன்ற இழப்புகள் ஏற்படுவதைத் தடுக்க முடியாது. இழப்பிற்குப் பின் சமூகத்தில் பல போராட்டங்கள் செய்யலாம்; நீதி கேட்கலாம். ஆனால் அம்மாணவர்களின் உயிர் மீண்டும் வருவதில்லை. தற்கொலை செய்து கொள்ளும் மாணவர்களில் பெரும்பாலும் பெண்ணாக இருப்பதால், பெண்ணின் (பாத்திமா) மரணத்தை முன் வைத்துச் சல்மா,

**கண்ணே**
**தூக்குக்கயிற்றுக்கும்**
**உனக்குமான தூரம்**
**அதிகமென்கிற நம்பிக்கையைக் கைவிடு**
**ஒரு நிமிடம் அல்லது ஐம்பது நொடிகளாகத்தான்**
**இருக்கும்**
**............**
**நீ அந்தத் தூரத்தை**
**கடந்து செல்வதற்கு**
**நாங்கள்**
**உனக்குக்**
**கற்றுத் தருவதில்லை**
**நாங்கள் வேறு வேளைகளில்**
**கவனமாக இருந்துவிடுகிறோம்**
**......**

***(சல்மா, தானுமானவள், பக்: 88)***

என்று மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார்.

பெண்கல்வி என்பது 74% தாண்டிய வளர்ச்சி நிலையில் இருக்கிறது. இருப்பினும் பெண்கள் பல துன்பங்களைத் தாண்டி கல்வியைப் பெறுகின்றனர், என்ற நிலை மட்டும் மாறவில்லை. பெண்களுக்குப் பாதுகாப்பு அவசியம் என்று கூறிப் பல பெண் குழந்தைகளின் படிப்பை 15 வயதுக்கும் குறைவான நிலையில் நிறுத்தி விடுகின்றனர். அத்தகைய சூழ்நிலைகளையும் தாண்டி பெண் கனவுகளைத் தூக்கி சுமந்தபடி மேற்படிப்பில் அடியெடுத்து வைக்கிறாள். அவளுக்குச் சமூகத்தை எதிர்கொள்ளத் தெரியவில்லை. அதனால் நம்பிக்கை இழக்கிறாள். மனதளவில் பலவீனம் குறைந்திருக்கும் இன்றைய தலைமுறையினர் சமூகத்தை எதிர்கொள்ளத் தெரியாமல் இறக்கின்றனர். இதனை,

**...............**
**நம்பிக்கைகளின் பலவீனங்களிலிருந்து**
**உன்னைப்போல ஒருத்தியை**
**விடுவிப்பதும் இல்லை**
**உன்னைச் சூழ்ந்திருக்கும்**

***கயிறுகளின் பலத்தைப் பலவீனப்படுத்து***
***வதும் இல்லை***
***முடிவுறாத இரவைப்போல***
***கயிறுகளின் பலமும்***
***எண்ணிக்கைகளும் மட்டும்***
***தினமும்***
***கூடிக் கொண்டிருக்கின்றன***

(ஐஐடி யில் தற்கொலை செய்துகொண்ட பாத்திமாவுக்காக) என்று குறிப்பிடுகிறார்.

***(சல்மா, தானுமானவள், பக்: 88)***

### மூன்றாம் பாலினச் சமூகம்

ஆண், பெண் என்ற இரு பாலினங்களைத் தாண்டி மூன்றாவது பாலினமாக இருப்பவர் திருநங்கையர் ஆவர். இவர்களுக்கான பாலின அங்கீகாரம் குறைவாக இருக்கிறது. சமூகத்தில் எண்ணற்ற தடைகளைத் தாண்டி வாழ்கின்றனர். திருநங்கைகளுக்கான நலத்திட்டங்களை அரசு அறிவித் திருக்கிறது. இருப்பினும் பலர் பிச்சை எடுத்தும், பாலியல் தொழில் செய்தும் பிழைக்கின்றனர். குறிப்பிட்ட பருவத்தில் உடலில் ஏற்படும் மாற்றங்களின் விளைவுகளைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் இருக்கின்றனர். உறுப்புகள் வெட்டப்பட்டு அவர்களுக்கான நிலையைக் காத்துக்கொள்ள எண்ணி துன்பம் அடைகின்றனர்.

சிலர் குடும்பத்தை வெறுத்துத் தனிமையைத் தேடி அவர்களின் இனக்குழுக்களில் இணைந்து வாழ்கின்றனர். அங்கு தன்னைப் பெண்ணாக மாற்றிக் கொள்ள கடினமான முறையில் ஆணுறுப்பைக் களைந்து கொள்கின்றனர். அவர்களின் வலியைச் சல்மா

***குறிகளை அனுமதிக்காதபடி***
***வெட்டி இறுக்கி***
***தைக்கப்பட்டுவிடுகிற***
***யோனிப் பைக்குள்***
***சொட்டித்தீரத் தவிக்கும்***
***சிறுநீரும் தீட்டும்***
***....***
***காயடிக்கப்பட்ட காம உணர்வோடும்***
***கடும் வலியோடும்***
***வரலாற்றின் பக்கங்களில்***
***கரைந்து கொண்டிருக்கிறார்கள்***
***வாரிஸ்டயரின்***
***சகோதரிகள்.***

***(சல்மா, தானுமானவள், பக்: 62)***

என்று பதிவு செய்துள்ளார்.

இன்று எளிதான மருத்துவ அறுவை சிகிச்சை முறைகள் வந்துவிட்டன. எனினும் எளிமையானநிலையிலும், பிச்சைஎடுத்தும், வறுமைக் கோட்டிலும் வாழுபவர்கள் இது மாதிரியான கடினமான, சுகாதாரமற்ற, ஆபத்தான வழியை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கதாகும்.

### மருத்துவக் கல்வி

தமிழகம் முழுவதும் மருத்துவம் படிக்கும் கனவுடன் வரும் மாணவர்கள் பலர் இருக்கின்றனர். அவர்களில் உயர்ந்தவர், தாழ்ந்தவர், ஏழை, எளியவர் என்று வேற்றுமைகளைக் களையும் நோக்கில் தகுதித் தேர்வு வைத்துத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 2013 ஆம் ஆண்டு முதல் மருத்துவம் படிக்கும் மாணவர்கள் தகுதித்தேர்வை எழுத அரசு உத்தரவிட்டது. அதில் பதின்மூன்று மாநிலங்களில், எட்டு மொழிகளில் இத்தேர்வினை நடத்தி வருகிறது. இந்நிலையில் 2017 ஆம் ஆண்டு அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த குழுமூர் என்ற ஊரில் செப்டம்பர் 1 ஆம் தேதி ச.அனிதா எனும் மாணவி தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் அரசியல் கட்சிகள், சமுதாய அமைப்புகள் போராட்டங்களில் ஈடுபட்டனர். மாணவர்கள் மத்தியிலும், மக்கள் மனதிலும் அனிதாவின் மரணம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனை

***...............***
***நான் பார்த்தேன்***
***கனவு வழிமறிக்கப்பட்டு***

***வன்கொடுமைக்குட்படுத்தப்பட்ட பிறகு***
***இருண்டு கனத்த***
***கயிறொன்றினைக் கூச்சமின்றி***
***அக்குழந்தையிடம் தந்துவிட்டுக்***
***கடந்து சென்றது சமூகம்.***
***உடைந்து நொறுங்கியதொரு கனவு***
***மிச்சமேதுமில்லாமல்.***

***(சல்மா, தானுமானவள், பக்: 55 )***

என்கிறார். சல்மா தாயற்ற அக்குழந்தையின் மரணத்தைச் சமூகக்கண் கொண்டு பார்த்துள்ளார் என்பதைக் காண முடிகிறது. நீட் தேர்வைத் தடை செய்ய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. மீண்டும் 2018 ஆம் ஆண்டில் நீட் தேர்வின்போது மாணவர்களின் தேர்வு மையங்களை, மாநிலங்கள் வாரியாக மாற்றி அமைத்தது. அப்போது பிரதீபா என்ற மாணவி மரணம் அடைந்தார். இது போன்ற பெண்களின் துயரம் மற்றும் தனிமைகளை மட்டும் ஒரு நூலில் குறிப்பிடுகிறார்.

***...........***
***எனது இந்த இளமையில்***
***நான் நினைத்துக்கொண்டிருப்பது***
***மரணத்தையல்ல***
***இறுதித் தனிமையை***
***..........***

***(சல்மா, ஒருமாலையும் இன்னொரு மாலையும்,பக்:26)***

என்ற வரிகளில் பெண்களின் நினைவுத் துயரங்களை வெளிப்பாடாய் காட்டியுள்ளார். தனிமையில் மன அழுத்தம் சிந்தனைகளைச் செயலிழக்கச் செய்கிறது என்கிற உளவியல் பார்வையைப் பெண்களின் வெளிப்பாட்டுக் கவிதைகளில் அறிய முடிகிறது.

சமூகத்தில் நடக்கும் இதுபோன்ற நிகழ்வுகளைப் படைப்பாளர் சல்மா எதிர்த்துக் குரல் கொடுத்துள்ளார். வாழ்க்கைப் பற்றிய பல்வேறு கனவுகளைத் தூக்கிக் கொண்டு வாழ நினைக்கும் இளைய சமுதாயத்தைச் சில விதிமுறைகளும், எல்லைகளும் வகுத்துத் தகர்க்கின்றன என்பதைக் கூறியுள்ளார். இவ்வாறு சமூக நலன் கருதி தனது கருத்தைக் கவிதையாக்கிய சல்மாவின் சமூகப்பார்வை புலப்படுகிறது.

### பெண்களும் சுரண்டப்படும் வளங்களும்

சமூகத்தில் காலங்காலமாகப் பெண் உடல் போகப் பொருளாகப் பார்க்கப்பட்டு வருகிறது. இதனைப் பார்த்துப் பழகிய பெண்களுக்கு மேலும் அப்பழக்கங்கள் திணிக்கப்படுகின்றன. பெண் உடலை அழகுப்படுத்திக் கொள்வதிலும், ஆடை, அலங்காரம் செய்து கொள்வதிலும் விருப்பம் கொண்டிருப்பாள். அது அவர்களின் இயல்பு என்று பெண்களுக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது. இப்பழக்கங்களில் விருப்பம் இல்லாத பெண்கள் எதிர்த்துக் குரல் கொடுக்கின்றனர். அவர்களின் விருப்பங்களைக் கூற விளைகின்றனர். அப்போது அவர்களின் விருப்பங்கள் முக்கியம் அற்றவையாகக் கருதப்பட்டு ஒடுக்கப்படுகின்றனர்.

பெண் பருவம் அடையும் செயலைக் கொண்டாடிக் களிக்கின்றனர். பின்னர் அவளை வீட்டிற்குள் இருக்கச் செய்கின்றனர். பெண் தாய்மை அடையவும் பிள்ளை பெறும் கருவியாகவும், ஆணின் உடைமைப் பொருளாகவும் பார்க்கப்படுகிறாள். இதனால் அப்பெண் அடையும் துன்பங்கள், துயரங்கள், போராட்டங்கள் பற்றி யாரும் அறிந்துகொள்ளவிரும்புவதில்லை. அவளின் அறிவும், சுயமும், சிந்தனையும், சக்தியும் அழிக்கப்பட்டு, ஒடுக்கப்படுகிறாள். அத்துன்ப துயர நிலைகளை அவள் முன் வந்து கூறுவதன் மூலம் உண்மையான உணர்வுகளை அறிய முடியும்.

***என்னை உடலாக நம்புகிற***
***உங்களிடம் எனதுடல் சற்று பேசட்டும்***
***என் மனதின் நுட்பங்களைக்***
***கேட்கவிருப்பமில்லாத***
***உங்களது செவிகளிடத்தில்***
***அது உரக்கப் பேசட்டும்***
***..........***

***(சல்மா, தானுமானவள், பக்: 74)***

என்று பெண் தனது விருப்பங்களை வெளிப்படுத்தும் போது அவளின் குரலுக்குச் செவி கொடுக்கத் தவறும் சமூகத்தினைச் சல்மா சாடுகிறார். பெண் அலங்கரித்துக் கொள்பவளாகவும், அலங்காரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவளாகவும் சமூகம் அவளுக்குப் பல சுமைகளை ஏற்றி வைக்கிறது என்கிறார். இதன் மூலம் பெண் நுகர்வுப் பொருளாகக் கருதப்படுகிறாள் என்பது புலனாகிறது. இதனை

..............

***நளினங்களையும் அலங்காரங்களையும்***
***யுகங்களாகப் பேண நேர்ந்த***
***அவலத்தை அது பேசட்டும்***

.....

***(சல்மா, தானுமானவள், பக்: 75)***

என்கிறார்.

சமூகத்தில் பல இடங்களில் பெண்ணிடம் வேலையை வாங்கிக் கொள்கின்றனர். ஆனால் அதற்கான கூலி குறைவாகக் கொடுக்கின்றனர். பிள்ளைகளைப் பெற்றுத்தந்து தலைமுறைகளை உருவாக்குகின்றனர். ஆனால் தலைமைப் பொறுப்பு பெண்ணுக்குக் கிடையாது என்கின்றனர். சமூகத்தில் ஆண், பெண் இருபாலரிலும் பழிச்சொற்களான ஓடுகாலி, கம்மனாட்டி, வாழாவெட்டி, விதவை, மலடி, வப்பாட்டி, விபச்சாரி, அடங்காப்பிடாரி போன்றவை பெண்களைக் குறித்ததாக அமைகின்றன. இப்படியாகப் பெண் பல அவதூறுப் பேச்சுகளுக்கு ஆளாகிறாள்; தன்மானம் இழந்து அவமானப்படுத்தப்படுகிறாள்.

பெண்களை மதக்கோட்பாட்டு விதிமுறைகளுக்கு ஆளாக்கி நசுக்கு கின்றனர். எல்லா காலங்களிலும் பெண்கள் பாலியல் சார்ந்து சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். பெண்களைப் போல் சமூகத்தில் இயற்கை வளங்கள் ஆக்கிரமிக்கப்பட்டும், சுரண்டப்பட்டும் வருகின்றன. இயற்கை வளங்களான மண், மலை, நீர், காற்று, ஆகாயம் என்ற பஞ்சபூதங்களையும் இச்சமூகம் சுரண்டிப் பிழைக்கிறது. இயற்கையும், பெண்ணும் ஒப்பிட்டுப் பார்க்கையில் இரண்டும் சமூகத்தால் சுரண்டப்படுகிறது. இதனைச் சல்மா,

..............

***யார் என்றறியா***
***யாரோ ஒருவனின் காமத்திற்குப்***
***படுக்கையில் தங்கிய கொடுந்துயரை***
***அது பேசட்டும்***

.......................

***மூடர்கள் வன்புணர்வது உடலை மட்டுமல்ல***
***ஓயாத இயற்கையை***
***அதன் சீற்றத்தைச் சுமந்து கொண்டிருக்கும்***
***ஓர் ஆயுதத்தை.***

***(சல்மா, தானுமானவள், பக்: 75)***

என்கிறார். பெண்ணின் உடலையும், அவளோடு தங்கி இருக்கும் இயற்கையின் பேராற்றலையும், நம்பிக்கைகளையும் இழக்கிறாள். இதன்மூலம் பெண் பிற சமூகத்தால் சுரண்டப்படுவதாகக் கருதப்படுகிறாள். மேலும் ஆக்கிரமிப்பு செய்யப்படும் நீர்நிலைகளில் ஒன்றான ஏரியைப் பெண்ணின் நிலையோடு ஒப்பிட்டுப் படைப்பாளர்,

.............

***நேற்று கூடக்***
***கசந்துபோன நம் உறவினை***
***இகழ்ந்து எச்சில் துப்பினாய்***
***தண்ணீரில்***
***எந்தக் காலமென்றில்லாமல்***
***எல்லாக் காலங்களிலும்***
***உன் கழிவுகளைக் கொட்டி***
***உன்னைச் சுத்தப்படுத்தியிருக்கிறாய்***
***இன்று இதில் எதையும்***
***நினைவுறுத்தாது***
***உன் தாகம் தணிக்கத் தயாராகிறாய்***

.........

***(சல்மா, பச்சை தேவதை, பக்: 39)***

என்கிறார். ஏரியை மாசுப்படுத்திவிட்டு, அதில் உள்ள நீரைக் குடித்து தாகம்

தீர்த்துக்கொண்டு உயிர் வாழ்கின்றனர். பெண்ணை இழிவுப்படுத்தலும், பெண்ணினால் நலம் பெறுவதும் பூமியில் நிகழ்ந்த வண்ணமே இருப்பதைப் பதிவு செய்துள்ளார்.

**இஸ்லாமியர்களும் குடியுரிமைச் சவால்களும்**

நாடு விடுதலை பெறுவதற்கு முன் இந்தியாவிற்கு வந்தவர்கள் இஸ்லாமியர்கள். இந்திய விடுதலைப் போராட்டத்தில் எண்ணற்ற இஸ்லாமியப் போராளிகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு நிலவரையறைகள் ஆண்டாண்டு காலமாய் இங்கு இருந்துள்ளன. இந்நிலையில் இந்திய குடியுரிமைச் சட்டம் 2019 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்டது. இச்சட்டம் இஸ்லாமியர்களைப் புறக்கணிப்பதாகக் கருதப்படுகிறது.

இந்திய விடுதலைக்குப் பிறகு இஸ்லாமியர்கள் இந்தியாவில் தங்கி வாழ்ந்த நிலையில் இந்தியாவை அவர்களின் நாடாக எண்ணி வாழ்கின்றனர். இத்தகைய சூழலில் குடியுரிமைப் பதிவேட்டை அசாமில் நடைமுறைப்படுத்தும்போது 19 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் குடியுரிமையை இழந்தனர். இதில் இந்து, முஸ்லிம் என்று இன்னும் பல மதத்தினரும் இருந்துள்ளனர். அவற்றுள் முஸ்லிம் அல்லாத மற்ற மதத்தினருக்கு (CAA & Citizenship Amendment Act) புதிய குடியுரிமை சட்டத்தின்படி குடியுரிமை வழங்கப்பட்டது. இதில் 2014 டிசம்பர் 31க்கு முன்பாக இந்தியாவில் தஞ்சம் புகுந்த கிறிஸ்தவர்கள், இந்துக்கள், பார்சிகள், பௌத்தர்கள், சீக்கியர்கள், என்ற ஆறு மதங்களைச் சேர்ந்தவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கும் வகையில் இதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதில் இஸ்லாமியர்கள் சேர்க்கப்படவில்லை. ஆகவே இஸ்லாமியர்கள் குடியுரிமை போராட்டங்களை நடத்துகின்றனர். இதனை

முஸ்லீம்கள் குடியுரிமைக்குத் தகுதியானவர்கள் இல்லை. பங்களாதேஷ் உருவான 1971 ஆம் ஆண்டுக்கு முன் ஒருவர் அல்லது அவரது முன்னோர்கள் இந்தியாவில் வாழ்ந்ததற்கானச்சான்றுகளை அளித்தால் மட்டுமே அசாம் குடியுரிமைப் பதிவேட்டில் இடம்பெற இயலும் என்பது தான் நிலைமை. சான்றுகளே இல்லாதவர்கள் எப்படி சமர்ப்பிக்க முடியும்? சுமார் 19 லட்சத்திற்கும் அதிகமானவர்களின் பெயர்கள் குடியுரிமைப் பதிவேட்டில் இல்லாமல் போனது. அகதிகளான முஸ்லிம் அல்லாத மற்ற மதத்தினரின் பெயரைக் குறிப்பிட்டு அவர்களுக்குக் குடியுரிமை தருவோம் என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறியுள்ளார். குடியுரிமைக்கு அப்பாற்பட்டவர்கள் (அதாவது முஸ்லிம்கள்) தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட வேண்டும் என்பதே இதன் குறிக்கோள் (ஷிஜுகான் (மலையாளத்திலும்), தமிழில் எல்.பி.சாமி, குடியுரிமையும் குடியுமைச் சட்டமும், பக்: 29).

குடியுரிமை பற்றி சல்மா தம் கவிதைகளில், எனது அம்மா 65 வயது உடையவர். அவருடைய தாய் 80 வயதுடையவர். உம்மும்மாவிற்கு 118 வயதாகிறது. உம்மும்மாவின் அம்மாவிற்கு ஒரு பாட்டி இருந்தாள். அவளும் இஸ்லாத்தின் ஏதாவது ஒரு பெயரில் வாழ்ந்திருப்பாள். இப்படி காலங்காலமாக வாழ்ந்து வருபவர்களைத் திடீர் என்று இந்த மண் உங்களுடையது இல்லை என்பது வேதனை அளிக்கிறது. இதனைச் சல்மா

.........

**இம்மண்ணோடான**
**எங்களது நேசத்தை**
**எங்களது**
**குருதியினாலேயே துடைத்தெறிய**
**நினைக்கிறார்கள்**
**பாதைகள் எங்கும் குருதி வழிந்தோட**
**மூடர்கள் ஆர்ப்பரிக்கிறார்கள்**

...........

**(சல்மா, தானுமானவள், பக்: 73)**

என்கிறார். ஆண்டாண்டு காலமாய் இந்தமண் எங்களுடையது என்று வாழ்ந்து

வருகிறோம். எங்களின் பிறப்பு, இறப்பு, சடங்கு, சம்பிரதாயங்கள், வாழ்வாதாரங்கள் எல்லாம் இம்மண்ணில் வேரூன்றி கிளைவிட்டிருக்கின்றன. நாட்டைவிட்டு வெளியேறும்படி கூறப்படும் செய்திகளைப் பாட்டி கேட்கிறாள். அப்போது சிரித்துக் கொண்டு, இதுதான் நம்நாடு என்கிறாள். இச்செய்தியின் துயரம் புரியாமல் பகடி செய்வதாக நினைக்கிறாள். மேலும்

**...............**

***அந்தநாடு இஸ்லாமிய நாடென்று சொன்னாலும் கூட***
***இந்த நாட்டின் எல்லை கடக்க***
***கண் தெரியாத அவள் விரும்புவதில்லை***
***நெருப்பை மென்மேலும் கொட்டி***
***நெருப்பை அணைக்க முயல்வது போல***
***வெறுப்பைக் கொட்டி வெறுப்பை வளர்க்க***
***நினைக்கிறார்கள்***

**.....................**

***(சல்மா, தானுமானவள், பக்: 73)***

என்கிறார். அன்றையச் சூழலில் குடியுரிமைப் பிரச்சினைக்குத் தலைவர்களும், எழுத்தாளர்களும், ஊடகவியலாளர்களும் எதிர்த்துக்குரல் கொடுத்தனர்.

இந்தியாவில் சிறுபான்மை இனமாகக் கருதப்படும் இஸ்லாமியர்கள் பிற சமூகத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அத்தகைய நிகழ்வொன்றினைச் சல்மா தனது படைப்பில் பதிவு செய்துள்ளார். முகமது யாசின் ஜுனைத்தின் இறந்துவிட்டான். மதவெறியர்கள் இரயிலில் பயணிக்க இருந்த ஜுனைத்தைக் கொலை செய்துவிட்டானர். அவன் இளம் வயதினன். இஸ்லாமியன் என்பதற்காகக் கொலை செய்யப்பட்டுள்ளான். இக்கொலையின் மூலம் பாதிக்கப்பட்ட தாயின் (சாயிரா) நிலையைச் சல்மா குறிப்பிட்டுள்ளார். குற்றம் செய்யாமல் கொலையுண்டு போன ஜுனைத் மாட்டின் உயிரைவிட மலிவானதாகக் கருதப்பட்ட நிலையைப் பதிவு செய்துள்ளார். இஸ்லாமிய சமூகத்தை எதிர்ப்பவர்களால் இதுபோன்ற இளைஞர்களின் குடும்பங்கள் பாதிப்படைகின்றன.

**..............**

***இன்று மறுபடியும்***
***எனது துயருற்ற ஆன்மாவைத் தூசு தட்டி***
***கூர்மையாக்கினேன்***
***ஜுனைத்தின் குருதியில்***
***தொப்பலாக நனைந்திருந்த***
***அவனது கருப்புநிறக் காலணி***
***எனது நினைவின் அடுக்குகளில்***
***மிதந்து திரிகிறது***
***ஒரு கரும்புகைவளையத்தைப்போல***

***(சல்மா, தானுமானவள், பக்: 76)***

என்ற வரிகளின் மூலம் சல்மா பதிவு செய்துள்ளார்.

மேற்கத்திய நாடுகளுக்குச் சென்றிருந்த சல்மாவிற்கு நிகழ்ந்த அனுபவங்கள் குறிப்பிடத்தக்கதாக உள்ளன. துருக்கியிலிருந்து புலம் பெயர்ந்தவர்கள் பெர்லினில் வாழ்கின்றனர். அங்கு சல்மா அரசு சார்பாகப் பயணம் செய்துள்ளார். அப்போது இஸ்லாமியர் என்பதற்காகச் சல்மாவைப் பாதுகாப்பு வளையத்திற்குள் வைத்துள்ளனர். மேலும் 2006 இல் பிராங்க் பர்ட் புத்தக திருவிழாவிற்குச் சென்றபோது இஸ்லாமியர் என்பதற்காக அவமதிப்புகளைச் சந்தித்துள்ளார். இதனை மேற்குலகம் இஸ்லாமிய சமூகத்தின் மீதான தனது வெறுப்புப் பார்வையை மேலும் மோசமானதாகத்தான் வைத்திருக்கிறது. உலகளாவியரீதியில் தொடர்ச்சியாகத் துவேஷத்திற்கு உட்படுத்தப்படுகிற சமூகமாகவே இஸ்லாமிய சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை இந்தப் பெர்லின் பயணத்தில் எனக்களிக்கப்பட்ட பாதுகாப்பை ஒட்டி புரிந்து கொள்ள முடிந்தது. (சல்மா, கனவுவெளிப்பயணம், பக்: 142) சல்மா இஸ்லாமியச் சமூகம் சந்திக்கும் இடையூறுகளைத் தமது படைப்பின் பல்வேறு நிலைகளிலும் உணர்த்தியுள்ளார்.

**சமூகத்தில் அடித்தட்டு மக்கள்**

சமூகத்தில் அடித்தட்டு மக்கள் என்பதற்கு மேட்டிமைக் குழுவிற்கு நேர் மாறாக எண்ணிக்கையில் அதிகமானவர்களாகவும், சமுதாயத்தின் வளங்களில் உரிய பங்கு பெற முடியாதவர்களாகவும், குறைந்த அளவு உணவு, குறைந்த அளவு உடை, குறைந்த கல்வி பெற்றும்' வாழும் மக்கள் பிரிவினரே அடித்தள மக்கள் எனப்படுகின்றனர். இந்தியச் சூழலில் அடித்தளமக்கள் என்பதற்கு, சாதி, செய்யும் தொழில், அரசியல் ஆதிக்கம், பாலியல் நிலை, பொருளாதார நிலை ஆகியனவற்றில் ஏதேனும் ஒன்றில் அல்லது அனைத்து நிலையிலும் தாழ்ந்திருக்கும் மக்கள் என எளிய வரையறை செய்யலாம். (ஆ. சிவசுப்பிரமணியன், அடித்தள மக்கள் வரலாறு, பக்: 50) என்கிறார்.

சமூகத்தில் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள் அடித்தட்டு மக்கள் ஆவர். இவர்கள் பெரும்பாலும் கூலி வேலைக்குச் செல்பவர்களாக இருக்கின்றனர். மேலும் அவர்கள் அன்றாடம் போராட்டங்களை எதிர்கொள்கின்றனர். இளைஞர்கள் மதுப் பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளனர். இவர்கள் செய்யும் வேலைச்சுமையால் குடிப்பதாகக் காரணம் கூறுகின்றனர். மாலை நேரம் வந்தால் மதுவைத் தேடுகின்றனர். சிலர் முழுநேரமும் குடிக்கின்றனர். இதனால் அவர்களின் குடும்பங்கள் பொருளாதாரப் பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர். இதனை.

**அழகிய மாலையைக்**
**குடித்துத் தீர்ப்பதற்கென**
**கூடியிருக்கிறார்கள்**
**யார் பொருட்டும்**
**ஒளிந்து கொள்ள வேண்டியிராத**
**அந்த இளைஞர்கள்**
**.........**

***(சல்மா, தானுமானவள், பக்: 45)***

இதன் மூலம் பொறுப்புடன் இருக்க வேண்டிய இளைய சமூகம் போதைக்கு ஆளாகி இருப்பதை அறியமுடிகிறது.

திருமணத்திற்கு முன் நெறி தவறும் பெண்களால் அனாதைக் குழந்தைகள் உருவாகின்றனர். பெண் தான் பெற்ற குழந்தையை அவமானமாகக் கருதி, குழந்தைக் காப்பகத்தில் விடுகிறாள். இச்செயலின் மூலம் அக்குழந்தை சமூகத்தில், சல்மா வாழும் சூழலைப் பதிவு செய்துள்ளார் அப்படிப்பட்ட குழந்தைகளை,

**................**
**மணமாகாத தாய்களுக்குப் பிறந்து**
**குப்பைத் தொட்டிகளுக்குப்**
**பரிசளிக்கப்பட்டவர்கள்**
**............**

***(சல்மா, தானுமானவள், பக்: 25)***

என்கிறார். ஏக்கம் கொண்ட அக்குழந்தைகள் தங்களைச் சந்திக்க விடுதிக்கு வருபவர்களைத் தாயாகக் கருதி இருக்கைகளையும் நீட்டி அழைப்பதாகக் குறிப்பிடுகிறார். இந்நிலை சமூகத்தின் பல தரப்புப் பெண்களுக்கு ஏற்படுகிறது.

போராட்டமாக இருக்கும் அடித்தட்டு மக்களின் வாழ்வியல் சூழல் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டும், சகித்துக் கொண்டும் வாழ கட்டாயப் படுத்தப்படுவதை அறிய முடிகிறது.

தூய்மைத் தொழிலாளர்கள் மீண்டும் மீண்டும் இத்தொழிலைச் செய்ய வற்புறுத்தப் படுகிறார்கள். எனவே அவர்கள் பல தலைமுறைகளாக இத்தொழிலைச் செய்கிறார்கள். இதனைக்

**கசங்கிய அரைக்கால்**
**உடை தரித்து**
**நாசியை எக்கும் நாற்றம் பருகியபடி**
**குப்பை சுமப்பான்**
**எத்தனையாவது பரம்பரையென**
**என்னைப் போன்றே தானும் அறியாதபடி ......**

***(சல்மா, பச்சை தேவதை, பக்: 98)***

என்கிறார். குப்பைகளுக்கு நடுவில் தூய்மையைத் தேடுகின்றனர். தூய்மைத் தொழிலாளர்களின் நிலையைக் கண்டு,

*.........*

***சுத்தங்களுக்கும் அசுத்தங்களுக்கும்***
***இடையேயான தூர்ந்துபோன***
***வேறுபாடுகளுடன்***
***நான் விலக்கிச் செல்கிற இடங்களையே***
***வசிப்பிடமாக்கிக் கொள்கிறான்............***

***(சல்மா, பச்சை தேவதை, பக்: 98)***

ஆண்டுதோறும் உலக புகையிலை தடுப்பு தினம் மே மாதம் 31 ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. மரிஜூவானா என்று அழைக்கப்படும் புகையிலையில் இருந்து போதைப் பொருட்களைத் தயார் செய்கின்றனர். இதற்கு இளைஞர்களும், பெரியவர்களும், சிறுவர்களும் பலியாகின்றனர். பான்பராக், ஹான்ஸ், குட்கா, தம்பக், பீடி, சிகரெட் போன்றவை நச்சுப்பொருட்களால் ஆனவையாகும். ஆனால் அதனைக் கண்டு கொள்ளாது தற்காலிக இன்பத்திற்காகப் போதைப் பொருட்களை நாடுகின்றனர். இதனைச் சல்மா

***எனக்குத் தெரியாது***
***இது நான்தானாவென்று***
***மரிஜுனாவைப் புகைத்து***
***அதனுள் நுழையும் வரை***
*..............*

***(சல்மா, தானுமானவள், பக்: 89)***

என்று குறிப்பிடுகிறார். ஆண், பெண் வேறுபாடின்றி இதனைப் புகைத்து வாழ்வை இழக்கின்றனர். புகையிலை சமூகத்தில் இருக்கும் கொடியவகைப் பேய். இதற்கு அடிமையானவர்கள் மறுவாழ்வு பெற்று மீள வேண்டும் என்ற சல்மாவின் சமூகப் பார்வையைக் காண முடிகிறது.

## முடிவுரை

சல்மாவின் கவிதைத் தொகுப்புகளில் சமுகத்தின் பல பிரச்சினைகள் முன் வைக்கப்பட்டிருப்பது அறிய முடிகிறது.

1. பெண் கல்வி குறித்து சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார். பெண் கல்வி பெறுவதில் ஏற்படும் இடர்பாடுகளைக் களைய வேண்டும்.
2. பெண் குழந்தைகளுக்கு ஏற்படும் நம்பிக்கை இழப்புகளைத் தவிர்க்க வேண்டும்.
3. பெண்களுக்குச் சமூகம் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும் என்கிறார். திருநங்கைகளின் உறுப்பு அறுக்கப்பட்டு அவதியுறும் துன்பநிலை வெளிப்படுகிறது.
4. பெண்களை இயற்கையோடு ஒப்பிட்டு, இயற்கை வளங்களை சுரண்டுவதைப் போல் பெண்ணும் சுரண்டப்படுகிறாள் என்பதை வலியுறுத்துகிறார்.
5. அடித்தட்டு மக்களின் பல்வேறு நிலைகள் பேசப்பட்டுள்ளது. மதுப்பழக்கத்திற்கும், போதைக்கும் அடிமையாகும் இளைய சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார். இளம் வயதில் வாழ்க்கையைத் தவறவிடும் பெண்களால் அனாதைக் குழந்தைகள் துயர வாழ்வைப் பெறுகின்றனர் என்பதை அறிய முடிகிறது.
6. பல தலைமுறைகளாகத் தூய்மைத் தொழிலார்கள் இத்தொழிலைச் செய்து வருகின்றனர் என்று அவர்களின் வாழ்க்கை மேம்பாடு பற்றிய சிந்தனையை விதைத்துள்ளார்.
7. சிறுபான்மை இனமாகக்கருதப்படும் இஸ்லாமியர்களின் குடியுரிமைப் போராட்டத்தின் வெளிப்பாட்டைக் காட்டியுள்ளனர். சல்மாவின் கவிதைகளில் இதுபோன்ற செயல்பாடுகள் வெளிப்படுவதன் மூலம் அவரின் சமூகச்சிந்தனை புலப்படுகிறது.

## பார்வை நூல்கள்


1. சல்மா, தானுமானவள், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில், முதல் பதிப்பு, 2021.
2. சல்மா, பச்சை தேவதை, காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில், ஐந்தாம் பதிப்பு, 2021.

3. சல்மா, ஒருமாலையும் இன்னொரு மாலையும், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில், ஒன்பதாம் பதிப்பு - செப்டம்பர் 2019.
4. ஆ. சிவசுப்பிரமணியன். அடித்தள மக்கள் வரலாறு, தேவா ஆப்செட் சென்னை, முதல் பதிப்பு 2002.
5. (தமிழில்) எம்.பி. சாமி. (மலையாள மூலம்) ஷிஜூகான், குடியுரிமையும் குடியுரிமைச் சட்டமும், பாரதி புத்தகாலயம் சென்னை, முதல் பதிப்பு - 2020.
6. சல்மா, கனவு வெளிப் பயணம், விகடன் பிரசுரம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர் 2014.
7. சி. பாலசுப்பிரமணியன், சங்ககால மகளிர், நாதன் அன் கம்பெனி சென்னை, முதல் பதிப்பு, 1983
8. பாரதிதாசன், குடும்ப விளக்கு, ஜெனரல் பிரிண்டர்ஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு, மே 1960.
9. திருக்குறள், சிற்பி பாலசுப்பிரமணியம், (உ-ஆ) தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், சென்னை, எட்டாம் பதிப்பு, 2022.

## இணையம்

1. https://www.tamilvu.org
2. https://www.bbc.com

## ஆய்வேடுகள்

1. க.புவனேஸ்வரி, மு.மேத்தா கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள்.
2. இரா. அனிதா, பெண் கவிஞர்களின் படைப்புகளில் பெரியாரியத் தாக்கம்.